**DEPOSITION OF WITNESS**
**(Chapter XX III Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1**
**RAMANATHAPURAM**
**CASE NO: S.T.C. 01/2020**
**Deposition of witness for prosecution-PW-1**

| | | |
|---|---|---|
| Name | : | திரு.சுகுமார் |
| Father Name | : | திரு.காசிராஜன் |
| Village | : | இராமநாதபுரம் |
| Taluk | : | இராமநாதபுரம் |
| Calling | : | |
| Religion | : | இந்து |
| Age | : | 52 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of 21 st day of April 2021.

முதல் விசாரணை:-

நான் இராமநாதபுரத்தில் வசித்து வருகிறேன். நான் இந்த வழக்கின் புகார்தாரர் என்னுடைய சத்திய பிரமாண வாக்குமூலத்தினை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். நான் சொல்ல சொல்ல என்னுடைய வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டது. அதனை எனது முதல் விசாரணை வாக்குமூலமாக ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன்.

எனது தரப்பில் குறியீடு செய்ய வேண்டிய ஆவணங்கள்

1.06.10.2020ம் தேதியிட்ட எதிரி எனக்கு கொடுத்த Bank of Baroda வங்கியின் ரூ.13,00,000/-ற்கான காசோலை எண்.000095 அசல் வா.சா.ஆ.1.

2.08.10.2020ம் தேதியிட்ட எதிரியின் கணக்கில் போதிய பணமில்லை என திருப்பப்பட்ட வங்கி குறிப்பாணை வா.சா.ஆ.2.

3.31.10.2020ம் தேதியிட்ட நான் எனது வழக்கறிஞர் மூலமாக எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் இரசீது வா.சா.ஆ.3.

4.06.11.2020ம் தேதியிட்ட நான் அனுப்பிய வழக்கறிஞர் மூலமாக எதிரிக்கு அனுப்பிய அறிவிப்பு சார்பு செய்யப்பட்ட ஒப்புகை அட்டை வா.சா.ஆ.4.

எதிரி தன்னுடைய வங்கி கணக்கில் போதிய பணமில்லை என தெரிந்தும் காசோலை அளித்து, என்னிடம் வாங்கிய கடன் பணத்தை திருப்ப தராமல் மோசடி செய்ததால் அவருக்கு தண்டனை வழங்கவும் அபராதமாக எனது தொகையை பெற்றுத்தரவும் இந்த வழக்கை தாக்கல் செய்கிறேன்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-

அவகாசம் கோரப்பட்டது. அளிக்கப்பட்டது.

(ஒப்பம்/- ஜெ.ஜெனிதா)
நீதித்துறை நடுவர் எண்.1,
இராமநாதபுரம்.